## 26 ஜனவரி 2014 அன்று கிறீன் கிறாஸ் விடுதியில் நடைபெற்ற குடியரசு தின வரவேற்பு நிகழ்வில் யாழ். இந்திய துணைத்தூதுவர் ஆற்றிய உரை

வடக்கு மாகாண ஆளுநர், கௌரவ ஜி.ஏ.சந்திரசிறி, நிகழ்வின் பிரதம விருந்தினர் அவர்களே,

கௌரவ வடமாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்கினேஸ்வரன் அவர்களே,

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களே,

வடக்கு மாகாண சபையின் கௌரவ உறுப்பினர்களே,

கௌரவ நீதிபதிகளே,

ஊடக நண்பர்களே

கௌரவ அதிதிகள், சீமாட்டிகளே, கனவான்களே, நண்பர்களே,

2. இந்த இனிய மாலைவேளையில் 65ஆவது இந்தியக் குடியரசு தினவிழாவிற்கு உங்களை வரவேற்பதை எனது கௌரவமாகக் கருதுகிறேன். இந்தியத் துணைத்தூதரகத்தை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்துவைத்த பின்னர் நாம் கொண்டாடும் 4ஆவது குடியரசு தினமாகும். அதிதிகளின் எண்ணிக்கை வருடாவருடம் அதிகரித்துவருவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இது எமது நட்பு வட்டத்தின் விரிவடைதலைக் குறிக்கிறது. இந்த மதிப்பார்ந்த வைபவத்தில் கலந்துகொள்வதற்காக எனது மனமார்ந்த நன்றிகளை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. கௌரவ ஜி.ஏ.சந்திரசிறி, அவர்களுக்கு இந்நிகழ்வின் கௌரவ விருந்தினராக வருவதற்கு சம்மதித்தமைக்கு எனது சிறப்பான நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

4. வடமாகாணத்தின் வரலாற்றில் முதலாவது முதலமைச்சர் கௌரவ நீதியரசர் சி.வி. விக்கினேஸ்வரன் அவர்கள் தமது அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் சகிதம் எம்மிடையே வருகை தந்திருப்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

5. உங்களனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்தையும், பொங்கல் வாழ்த்தையும் தெரிவிக்க இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த விரும்புகிறேன். அனைத்து இலங்கையருக்கும் சமாதானத்தையும் வளத்தையும் இந்த ஆண்டு தருவிக்கவேண்டும் என வாழ்த்துகிறேன்.

6. இந்தியா 67 வருடங்களுக்கு முன்பு சுதந்திரமடைந்தது ஆனால் 1950ஆம் ஆண்டிலேயே குடியரசானது. அத்துடன் இன்று இந்தியாவின் 65ஆவது குடியரசு தினமாகும். இந்தியா கடந்த ஆறு தசாப்தங்களில் பல பாரிய மாற்றங்களைச் சந்தித்தது. 1947இல் இருந்து மாற்றமடைந்து

வரும்போதும் இந்தியாவின் அடிப்படைக் கட்டுமானம் 26 ஜனவரி 1950இல் ஏற்கப்பட்ட அதன் அரசியலமைப்பிலேயே உள்ளது. இந்தியாவை சரியான முன்னேற்றப்பாதையிலும், நவீனத்துவப்பாதையிலும் திடமாகக் கொண்டுசெல்வதில் குறிப்பிடத்தக்க மைல் கல்லாக அமைவது அதன் அரசியலமைப்பே ஆகும். வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான உத்வேகம் மக்களின் வல்லமையால் பின்னூட்டப்படுகிறது என்பதும் அடிப்படைச் சுதந்திரம், ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சி என்பவற்றில் உள்ள தளராத நம்பிக்கையால் செலுத்தப்படுவதும் முக்கியமானவை.

7. இந்திய ஜனாதிபதி மேன்மை தங்கிய திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் 65ஆவது குடியரசு தினமாகிய நேற்றைய தினம் மாலைவேளையில் சகபிரஜைகளுக்கு உரையாற்றினார். அவர் தனது உரையில் குறிப்பிட்ட சில முக்கிய விடயங்களை இங்கு ஞாபகப்படுத்தலாம் என எண்ணுகிறேன். தனது உரையில் ஜனநாயகத்தின் வேர்களையும் இந்தியாவின் ஜனநாயகத்துக்கான அர்ப்பணிப்பையும் பாராட்டிப்பேசியதுடன் அது எதிர்கொள்ளக்கூடிய சவால்களுக்காக எச்சரிக்கை விடுத்தார். எமது மக்களவையின் 16ஆவது பொதுத் தேர்தல்கள் வரும் சூழ்நிலையில் ஒவ்வொரு இந்திய வாக்காளரையும் தனது வாக்குரிமையை ஸ்திரமான இந்திய அரசை அமைக்கும் பொருட்டு கவனமாகவும் பொறுப்புள்ள வகையிலும் பயன்படுத்துமாறு அழைப்புவிடுத்தார். அதேபோல வாக்காளரின் நம்பிக்கையை வேண்டுவோர் எது செய்யச் சாத்தியமுள்ளதோ அதைமட்டுமே வாக்குறுதியளிக்கவேண்டுமெனவும் அவர் எச்சரிக்கை விடுத்தார். அத்துடன் அவர்களை இந்திய மக்களுக்கும் தமக்குமிடையான நம்பிக்கைப் பற்றாக்குறையை நிவர்த்திசெய்ய முயலவேண்டுமென அவர்களுக்கு அழைப்பு விடுத்தார். 2014ஆம் ஆண்டு ஒரு எழுச்சி மிக்க ஆண்டாக அமையும் என நம்பிக்கை வெளியிட்டார்.

8. இலங்கை இந்திய விவகாரங்கள் பக்கம் பார்க்கையில், இந்திய இலங்கை உறவுகள் 2500 ஆண்டுகளுக்கு மேற்பட்டவை. இருநாட்டு உறவுகள் முதிர்ச்சியடைந்தும் காலப்போக்கில் அனைத்து சமகாலப் பொருத்தப்பாடுள்ள துறைகளையும் உள்ளடக்கி பல்வகைப்பட்டதாகவும் அமைகிறது. அண்மைக்காலத்தில், உறவுகள் இந்திய இலங்கை மக்களிடையான விரிவான உறவாகவும் உயர் அரசியல் மட்டத்தில் நெருக்கமானதாகவும் வர்த்தகம் முதலீட்டுத் துறைகளில் வளர்ச்சி காண்பதாகவும் அபிவிருத்தி கல்வி கலாச்சாரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றில் கூட்டுறவுள்ளதாகவும் அமைகிறது.

9. முன்னணி இந்திய தனியார்துறை நிறுவனங்களின் இலங்கை முதலீட்டுடன் வளர்ச்சியடையும் மற்றும் துடிப்புள்ள பொருளாதார வர்த்தக கூட்டுறவை அனுபவிக்கின்றன. சார்க் (SAARC) பிராந்தியத்தில் இலங்கையானது இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தகப் பங்காளியாகும். இதேபோல் இந்தியா இலங்கையின் மிகப்பெரிய வர்த்தகப் பங்காளியாகவும் உள்ளது.

10. கடந்த இந்தியக் குடியரசுத்தினத்திலிருந்து நெருக்கமான இருபக்க உறவுகளைக் காட்டும் பல்வேறு உயர்மட்ட விஜயங்கள் இடம்பெற்றுள்ளன. எமது வெளிவிவகார அமைச்சர்

மேன்மைமிகு சல்மான் குர்ஷித் அவர்களே வடமாகாண சபை பதவியேற்பு நடைபெற்றபின் விஜயம் செய்த முதல் வெளிநாட்டு முக்கியஸ்தராவார். அவர் வடமாகாணத்தின் கௌரவ ஆளுனர், கௌரவ முதலமைச்சர் மற்றும் வடமாகாண அரசியல் தலைவர்களுடன் கலந்துரையாடும் சந்தர்ப்பத்தைப் பெற்றிருந்தார். பின்னர் வெளிவிவகார அமைச்சர் பொதுநலவாய அரசுத்தலைவர்களின் உச்சிமாநாட்டில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தார். இந்திய வெளிவிவகாரத்துறையின் செயலாளர்கள் நிலை அதிகாரிகள் பலர் வடமாகாணத்தில் இந்தியா பொறுப்பேற்ற பல அபிவிருத்தித் திட்டங்களை மேற்பார்வை செய்யவென பலதடைவைகள் வருகை தந்தனர்.

11. 2010ஆம் ஆண்டு நவம்பரில் ஸ்தாபிக்கப்பட்ட துணைத்தூதரகம் தனது மூன்று வருட செயற்பாடுகளை இரண்டு மாதங்களுக்கு முன்னர் பூர்த்தி செய்துள்ளது. துணைத்தூதரகத்தின் ஆரம்பம் முதல் இதை வழிநடத்தும் கௌரவம் எனக்குக் கிடைத்துள்ளது. இந்த மூன்று ஆண்டுகளும் வடக்கு மாகாணத்தின் பாரிய வளர்ச்சியை அவதானித்தமையை திருப்தியுடன் கூறலாம். இன்றைய வடக்கு மாகாணம் 2010ஆம் ஆண்டு நவம்பரில் பார்த்த ஒன்று அல்ல, அது உட்கட்டமைப்பிலாயினும் சரி, வீதிகளாயினும் சரி, வைத்தியசாலைகளாயினும் சரி, வைத்தியர்கள் மருந்துகள் மின்சாரம், வீட்டுத்தேவைப்பொருட்கள் மற்றும் நாளாந்தப் பாவனைப்பொருட்களின் கிடைக்கக் கூடிய தன்மையாயினும் சரி தொலைத் தொடர்பு, போக்குவரத்து தங்கும் விடுதிகள் போன்றனவாயினும் சரி. இன்று பல்பொருள் அங்காடிகளும் நவீன பல்வகை திரையரங்குகளும் உள்ளன. வாழ்க்கைத்தரம் மூன்று வருடங்களில் குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது.

12. மூன்று தசாப்தங்கள் நீடித்த ஆயுத முரண்பாட்டால் நாசமாக்கப்பட்ட வடமாகாணத்தை மீள்கட்டுமானம் செய்யவும் மக்களுக்குப் புனர்வாழ்வளிக்கவும் இந்தியா தனது பங்களிப்பைச் செய்துள்ளது. அபிவிருத்திக் கூட்டுறவுக்கான இந்தியாவின் இலங்கையுடனான பங்காளித்துவம் அரசியல் புரிந்துணர்வு, கடந்தகால வரலாறு, புவிசார் அமைவிடம் சமூக கலாச்சாரத்தின் ஒரே தன்மைபற்றிய புரிந்துணர்வு என்பவற்றை அடிப்படையாக கொண்டது. இந்தக் கூட்டுறவானது புரவலராகவுள்ள அரசாங்கத்தின் முன்னுரிமைகளுக்கு ஏற்பவும் இலங்கை அரசின் முகவர்களுடன் சேர்ந்து நடைமுறைப்படுத்துவதாகவும் அமைகிறது. இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டு முதல் எமது உதவியின் தன்மைகள் வளரத்தொடங்கியிருந்த போதும், முக்கிய கவனம் வாண்மை விருத்தியிலும், மனித வளவிருத்தியிலும், உட்கட்டுமான உதவியிலும் உள்ளது. கடந்த நான்கு வருடங்களில் 24 பில்லியன் இலங்கை ரூபா பெறுமதியான செயற்றிட்டங்களை இந்திய அரசு இலங்கையில் நடைமுறைப்படுத்தியுள்ளது. திட்டவரைபுகள் கிட்டத்தட்ட பொருளாதாரத்தின் அனைத்துப் பாரிய துறைகளையும் உள்ளடக்குகிறது.

13. அனைத்துச் செயற்றிட்டங்களிலும் மிகமுக்கியமானதாக இந்திய வீட்டுத்திட்டம் அமைகிறது. முழு வட மாகாணத்திலும் 25 பிரதேசங்களில் பரந்து காணப்பட்டதாலேற்பட்ட கஷ்டங்களிருந்தபோதும் முதல் கட்ட 1000 வீடுகள் எனும் திட்டமானது ஜூலை 2012 இல்

பூர்த்திசெய்யப்பட்டது. இரண்டாம் கட்டமான 43000 வீடுகள் எனும் திட்டமானது ஒக்டோபர் 2012இல் ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரையில் 10250 வீடுகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. இலங்கைக்கான வீட்டுத்திட்டத்தின் 50000 வீடுகள் எனும் இலக்கை 2015இல் அடையமுடியும் என எதிர்பார்க்கிறோம்.

14. இந்திய ரெயில்வே கட்டுமான கம்பனி எனும் பொதுத்துறை நிறுவனத்தால் செய்யப்படும் வடக்கு புகையிரத தடத்தின் மீளமைப்பானது இந்திய கடன் உதவியுடன் நிறைவேற்றப்படும் அதேவேளை, பாரிய முன்னேற்றத்தை, எதிர்பார்ப்பை விட முன்னதாகவே செயற்படுத்திக் காட்டியது. ஓமந்தைக்கும் கிளிநொச்சிக்கும் இடையான புகையிரதத் தடம் கடந்த செப்ரெம்பர் மாதம் திறந்து வைக்கப்பட்டது. பளை வரையான இணைப்பு பூர்த்தியடையும் நிலையில் உள்ளதுடன் பெப்ரவரி 2014இல் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தடத்தில் சென்றுவந்த யாழ்தேவி கடுகதி புகையிரதம் யாழ்ப்பாணத்துக்கான தனது சேவையை 2014ஆம் ஆண்டில் துவங்கும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

15. காங்கேசன்துறை துறைமுக புனரமைப்பானது இந்திய நிதியுதவியுடன் மூன்று கட்டங்களைக் கடந்து பூர்த்தியடைந்தது. இதன் கடைசிக்கட்டமான துறைமுகத்தைத் தூர்வாரும் பணிகள் இந்திய தூர்வாரும் நிறுவனத்தால் செய்யப்பட்டது. இந்திய நிதியுதவியுடன் பலாலி விமான நிலைய ஓடுபாதைகள் பகுதியளவில் மீளமைக்கப்பட்டன. காங்கேசன்துறை துறைமுகத்தை வர்த்தகத் துறைமுகமாகவும் பலாலி விமானநிலையத்தை பிராந்திய இணைப்புகளுள்ள விமான நிலையமாகவும் விருத்திசெய்யும் திட்டம் இன்னும் தயாரிப்பு நிலையில் உள்ளது. பாரிய இணைப்பாக மேம்படுத்தப்படவுள்ள இவற்றின் அனுமதிக்காகக் காத்திருக்கிறோம். இத்திட்டத்தால் எமது இலங்கை நண்பர்கள் புகையிரதம் மற்றும் கப்பல் மூலம் இந்தியாவுக்குப் பயணம் செய்ய முடியும்.

16. கடந்த வருடம் பல இந்திய அபிவிருத்திப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அவற்றில் சில பூர்த்தி செய்யப்பட்டும் விட்டன. இந்திய அரசின் மானிய உதவியுடன் குருநகரிலுள்ள வடகடல் மீன்வலைத் தொழிற்சாலைக்கு முழுமையான இயந்திரத் தொகுதி வழங்கப்பட்டு பாரம்பரியக் கைத்தொழில்கள் அமைச்சிடம் கையளிக்கப்பட்டது. இது மீன்வலைத் தொழிற்சாலையின் உற்பத்தித் திறனை ஐந்து மடங்காக்கியது.

17. இருபத்தைந்து ஏக்கர் விஸ்தீரணமுள்ள அச்சுவேலி கைத்தாழிற்பேட்டையை புனரமைக்கும் பணிகள் கடந்தவருடம் ஆரம்பிக்கப்பட்டது. இங்கு 22 கைத்தொழில் அலகுகள் இலங்கையின் தொழில் முனைவோருக்கு எல்லா அடிப்படை வசதிகளுடனும் பாவனைக்கு அடுத்தமாதம் அளவில் வரும் வடக்குமாகாண தொழில்முனைவோரை இலங்கைக் கைத்தொழில் அதிகாரசபையுடன் பேச்சுவார்த்தை நடத்துமாறு ஊக்குவிக்க இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துகிறேன். இதன் மூலம் அவர்கள் அங்கு இடத்தைப் பெற்றுக்கொண்டு வடமாகாண கைத்தொழிற் துறையை உற்சாகப்படுத்தும் செயன்முறையில் ஈடுபடமுடியும்.

18. இந்திய அரசின் நிதியுதவியுடன் வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் கட்டப்படும் 200 கட்டில்களையுடைய மருத்துவ விடுதிக் கட்டுமானம் 2014ஆம் ஆண்டு மே மாதமளவில் நிறைவடைந்து மாவட்ட வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்படும் நிலையிலுள்ளது. கடந்த வருடம், கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் ஆயுதப்பிணக்கால் பாதிக்கப்பட்டிருந்த 1320 சிறிய வியாபாரங்களுக்கு இந்திய அரசின் இலங்கை ரூபா 25,000 முதல் 200,000 வரையான உதவிகள் தமது வியாபாரத்தை மீள ஆரம்பிக்கவென வழங்கப்பட்டன.

19. கலாச்சார உறவுகள் வருகை தரும் கலைக்குழுக்களினால் வலுப்படுத்தப்படுகின்றன. நல்லூர் உற்சவகாலத்தின்போது நிகழும் தெய்வீக சுகானுபவம் நிகழ்வு குறிப்பிடத்தக்க ஒன்றாகும். 2013 ஓகஸ்ட்டில் நடைபெற்ற நிகழ்வில் கர்நாடக குரலிசைக் கலைஞர் சுதா ரகுநாதன், டி.எம். கிருஷ்ணா மற்றும் பிரபல பரதநாட்டியக் கலைஞர் லீலா சாம்சன் ஆகியோர் சிறப்பான ஆற்றுகைகளை வழங்கினர். அத்துடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்களுக்கும் பாடசலை மாணவருக்கும் பயிலரங்கை நடத்தினர். எதிர்வரும் வருடங்களிலும் இவைபோன்ற நிகழ்வுகளைத் தொடர்ந்தும் ஒழுங்குசெய்வோம். மன்னாரிலுள்ள திருக்கேதீஸ்வரம் கோயிலை புனருத்தாரணம் செய்வதற்கு ஆவன செய்துள்ளோம். தமிழ்நாடு மகாபலிபுரத்தில் ஸ்தபதிகள் விக்கிரகங்களையும் தூண்களையும் செதுக்குகின்றனர். இவை வரும் மாதங்களில் மன்னாருக்கு கப்பலில் அனுப்பப்பட்டு ஆலயத்தின் முற்கால சிறப்பிற்கு கொண்டுவர பயன்படுத்தப்படும். விளையாட்டு வசதிகளை மேம்படுத்துவதற்கு துரையப்பா விளையாட்டரங்க புனரமைப்பு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

20. யாழ்ப்பாணம் தேசிய நூலகத்துக்கு அருகில் யாழ்ப்பாணக் கலாச்சார மையத்தைக் கட்டுவதற்கான அத்திவாரக் கல் நடும் நிகழ்வு 2014 இல் நடைபெறும் என நான் உறுதியாக நம்புகிறேன். இக்கட்டடமானது முழு வடமாகாணத்திலும் மிகமுக்கிய அடையாளமாக அமையும்.

21. இந்திய அரசு இலங்கையின் ஒவ்வொரு மாகாணத்திலும் ஒவ்வொரு மொழி ஆய்வு கூடம் அமைக்க தீர்மானித்ததன் பிரகாரம் யாழ்ப்பாணத்தில் கோப்பாயில் இவ்வாய்வு கூடத்தை 2014 மார்ச் அளவில் நிறுவ எதிர்பார்த்துள்ளோம்.

22. இதேபோல் வடமாகாண கைவினைக்கலைஞருக்கும் கலைஞர்களுக்குமான ஒரு கைவினைக்கிராமத்தை 2014 இல் கைதடியில் நிறுவத் திட்ட முன்மொழிவு செய்யப்பட்டுள்ளது. இங்கு அவர்கள் ஒரே கூரையின்கீழ் உற்பத்தி செய்து காட்சிப்படுத்தி விற்பனை செய்யமுடியும். பல்வேறு குடும்பங்களின் வாழ்வில் இத்திட்டம் நேரடித்தாக்கத்தை ஏற்படுத்தும்.

23. ‘‘இந்திய இலங்கை அறிவு முன்முயற்சி’’ திட்டத்தின் கீழ் இலங்கைப் பிரஜைகளுக்கு வழங்கப்பட்ட புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை 800 ஆகும். இலங்கையின் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பயில்வோருக்க 500 புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் ஏறத்தாழ 300 புலமைப்பரிசில்கள் தொழில்சார் கற்கைகளான மருத்துவமாணி, இயந்திரவியல்

இளமாணி, மருந்தியல் இளமாணி போன்றவற்றை சுய செலவில் கற்போருக்கு பல்வேறு திட்டங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

24. கடந்துசென்ற வருடங்களைத் திரும்பிப் பார்க்கும்போது வடமாகாணத்தின் புனரமைப்புக்கும் புனர்வாழ்வுக்கும் நாம் செய்த பங்களிப்பையும் உதவிகளையும் எண்ணிப் பெருமிதமடைகிறோம். எமது அபிவிருத்திப்பங்காளித்துவம் பிரகாசமாக இருக்கும் என மிகவும் நம்பிக்கையுடன் உள்ளேன். இலங்கை அரசு, வடமாகாண அதிகாரத்தினர், மற்றும் இலங்கை மக்களுடன் வடமாகாண மக்களின் வாழ்வையும் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்துவதற்காக தொடர்ந்தும் ஈடுபாட்டுடன் செயற்பட ஆவலாகவுள்ளோம்.

25. எனதுரையை நிறைவு செய்யமுன்னர், இந்திய அரசு 2013 செப்ரெம்பரில் நடைபெற்ற மூன்று மாகாணங்களின் தேர்தலை குறிப்பாக வடக்கு மாகாணத்துக்கான தேர்தலை வரவேற்றிருந்ததைக் குறிப்பிட விரும்புகிறேன். உயர்வான வாக்களிப்பு வீதமும் பல்வேறு அரசியற்கட்சிகளின் உற்சாகமான பங்கேற்பும் இலங்கை மக்களின் ஜனநாயகத்துக்கான தொடர்ச்சியான அர்ப்பணிப்பைக் காட்டுவதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அனைத்துப்பங்காளர்களையும் பிரயோசனமான வகையில் பங்காளித்துவ மனப்பான்மையுடனும் பரஸ்பர விட்டுக்கொடுப்புடனும் ஈடுபடுமாறு கேட்டுக்கொள்கிறேன். அத்தகைய ஒரு கூட்டுறவுள்ள அணுகுமுறையே உண்மையான நல்லிணக்கத்துக்கும் அரசியற் தீர்வுக்கும் வழிசமைக்கும். இச்செயன்முறையை முன்னெடுத்துச்செல்வதற்கு அனைத்துப்பங்காளர்களுடனும் சேர்ந்து செயற்பட இந்திய அரசு தன்னை அர்ப்பணித்துள்ளது.

26. புதிய ஆண்டு இந்திய-இலங்கை உறவைப் புதிய உச்சங்களுக்கு எடுத்துச் செல்லும் எனவும் மக்களின் வளத்திற்காகவும் நலனுக்காகவும் இலக்குகளைப் பகிர்ந்துகொண்டு நாம் அனைவரும் வேலைசெய்யமுடியும் எனவும் நம்புகிறேன்.

27. இறுதியாக, துணைத் தூதரகத்திலுள்ள எனது சகாக்களும் நானும் இலங்கை அரசு, வடமாகாண அதிகாரத்தினர், மற்றும் இலங்கை மக்கள் குறிப்பாக வடமாகாண மக்கள் ஆகியோருடனான நட்புறவுக்கும் இதமான வரவேற்புக்கும் எமது ஆழமான நன்றியுணர்வைத் தெரிவிக்க விரும்புகிறோம். எம்முடன் இந்த மாலை வேளையில் இணைந்துகொண்டமைக்கு மீண்டுமொருமுறை நன்றிகள்.

நன்றி.